# இலங்கை – இந்திய உறவில் பாக்கு நீரிணையின் முக்கியத்துவம்: புவிசார் அரசியலை மையப்படுத்திய ஆய்வு

**ஜீவராசா டிலக்ஷனா**

*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*

dilaksjeeva99@gmail.com

**அறிமுகம்**

இலங்கைத் தீவானது இந்தியாவின் கடல் எல்லையின் மையத்தில் 20 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இது இந்தியாவிலிருந்து 14.5 கடல் மைல் (17 மைல், 27கி.மீ) தொலைவில் பாக்கு நீரிணையினால் பிரிக்கப்பட்டிருக்கிறது. பாக்கு நீரிணை என்பது தென்கிழக்கு இந்தியாவிற்கும் வட இலங்கைக்கு இடையே அமைந்துள்ள ஒரு கடற்பரப்பாகும். இந்த நீரிணைக்கு, பிரித்தானிய ஆட்சியின் போது சென்னை மாகாணத்தின் ஆட்சியாளராக இருந்த றொபர்ட் பால்க் (Robert Palk) என்பவரின் பெயர் கொண்டழைக்கப்பட்டதால் Palk Strait என்று பிரயோகிக்கப்பட்டது. பாக்கு நீரிணை இலங்கை – இந்திய அரசியலின் மையப்பகுதியாகும் என்பது இவ்வாய்வின் புரிதலாகும். இது இந்தியா – இலங்கைக்கு இடையே புவியியல் ரீதியான தொடர்பையும், வர்த்தக வழித்தடத்தையும், மீனவர்கள் வாழ்வாதாரத்தையும் பேணுவது போன்று இரு நாட்டு அரசியல் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் அதீத செல்வாக்கு செலுத்துகிறது. இதனால், பாக்கு நீரிணை தொடர்பான அரசியல் என்பது மிகவும் நுட்பமானதும், சர்ச்சைகளால் நிரம்பியதுமானதாக காணப்படுகிறது. இது இரு நாட்டினது பாதுகாப்பையும் பொருளாதாரத்தையும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகின்ற போதும் இரு எல்லைகளையும் பிரதிபலிக்கும் தேசிய இனங்களின் அரசியல் மீது செல்வாக்கு செலுத்துகின்ற ஒன்றாகவும் காணப்படுகிறது. இதன் அடிப்படையிற்தான் இலங்கைத்தீவின் இருப்பு தனித்துவமாக உள்ளது. இலங்கையும் இந்தியாவும் சுதந்திர அரசாக அமைய முன்னர் அவை பிரித்தானிய காலனித்துவத்திற்குட்பட்ட நாடாக இருந்தன. பிரித்தானிய இந்தியாவில் சுமார் 560 சமஸ்தானங்கள் அமையப்பெற்றதாக கூறப்படுகிறது. இது இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 40% மாகவும், 25% மக்கள் தொகையையும் கொண்டிருந்த அதேவேளை, இலங்கை ஒரு தனித்தீவாக அமையப்பெற்றது. அதனாலேயே இலங்கைத் தீவைத் தனி அரசாக வைத்திருப்பது இந்துமாகடல் தழுவிய கடல்சார் காலனிய ஆதிக்க சக்திகளுக்கு அவசியமாக இருந்தது.

பிரித்தானிய இந்தியா, இலங்கைக்கும் இந்தியாவிற்குமான உறவை தெளிவாகக் கட்டமைத்து இருந்தது. ஆரம்பத்தில் சென்னை நிர்வாகத்துடனும் பின்னர் பிரித்தானிய நேரடி நிர்வாகத்தின் கீழும் இலங்கைத் தீவை நிர்வகித்துக்கொண்டனர். சுதந்திரத்திற்கு பின்னரும் இந்தியாவுடனான இலங்கை இணைப்பு முயற்சிகள் நிகழ்ந்தன. இந்தியாவின் பாதுகாப்பானது இலங்கைத் தீவுடன் பின்னிப்பிணைந்ததாக இருப்பதால், இந்தியாவின் பிராந்திய ரீதியான பாதுகாப்புக்கு இலங்கையின் அமைவிட முக்கியத்துவம் இன்றியமையாததாக உள்ளது. இலங்கைத் தீவின் புவிசார் அரசியல் முக்கியத்துவத்தினால் இந்தியாவினைத்தவிர வேறு சக்திகள் நிலைகொள்வது இந்தியாவின்

பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைய வாய்ப்புள்ளது. இது இந்து சமுத்திர பிராந்திய வல்லரசு கோட்பாட்டிற்குப் பாதகமானதாகவும் அமையும் என இந்தியா கருதுகிறது. காரணம் இலங்கையில் நிலை கொள்ளும் எந்தவொரு வல்லரசும் இந்தியாவின் பிராந்திய வல்லரசுக் கோட்பாட்டினை சிதைக்க முயற்சிக்கும் என்ற எடுகோளின் அடிப்படையில் நோக்கப்படுகிறது.

இலங்கைத்தீவு இந்து சமுத்திரத்தை நோக்கிய வல்லரசுகளின் செல்வாக்கு அல்லது ஆதிக்கம் ஏற்படக்கூடிய புவிசார் மையத்தில் அமைந்துள்ளது. உலக வல்லரசுகளின் நேரடியான, மறைமுகமான செல்வாக்கிற்கு உட்படக்கூடிய அமைவிடத்தில் அமைந்துள்ள இலங்கை, இந்தியாவின் அயல்நாடு என்ற அடிப்படையில் முக்கியத்துவம் பெறுகிறது. அதன் அடிப்படையிலே இலங்கை தீவில் வரலாற்று காலம் முதல் இந்தியாவின் தாக்கமும் ஈழத்தமிழரின் இனப்பிரச்சினை மீதான நேரடி தலையீடும் காணப்படுகிறது.

வட இந்தியாவில் கடல் பேரரசு தோன்றாத காலத்தில், தென்னிந்தியாவில் தோன்றிய பலம் பொருந்திய முதல் கடற்பேரரசாக சோழப்பேரரசு காணப்படுகிறது. 10ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோழப்பேரரசு அநுராதபுரத்தைக் கைப்பற்றுவதற்கு பாக்கு நீரிணை மூலாதாரமாக அமைந்தது. சோழப்பேரரசு பின்பற்றிய அத்தகைய வெளியுறவுக்கொள்கையே சமகாலத்திலும் இந்தியாவின் பிராந்திய மற்றும் அனைத்துலக அணுகுமுறைக்கும் அவசியமானதொன்று என்ற விமர்சனம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 21ஆம் நூற்றாண்டில், முன்வைக்கப்பட்டிருக்கும் இந்தோ – பசுபிக் தந்திரோபாய கொள்கையானது சோழப்பேரரசின் இன்னோர் வடிவமாக நோக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் பாக்கு நீரிணை இரு அரசுகளின் தனித்துவத்தையும் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கி இருப்பதையும் முதன்மைப்படுத்துகிறது.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கைத்தீவானது பிரித்தானிய சார்பு போக்கினைக் கடைப்பிடிக்க முயன்றதனால் இந்தியாவின் நேரடிக் கண்காணிப்பிற்குள் இலங்கைத்தீவு உட்பட்டது. இக்காலப்பகுதியல் இலங்கை தீவில் இருந்த இனங்களுடன் இந்தியாவுக்கு இருந்த உறவானது இலங்கை இந்திய உறவைத் தீர்மானித்தது. இலங்கைத் தீவில் இனங்களின் அடையாளத்தின் அடிப்படையில் இந்தியாவின் செல்வாக்கு கலாசாரத்திலும் ஏனைய அரசியல், பொருளாதார அம்சங்களிலும் வளர்ந்தது. இந்தியாவின் பாதுகாப்பிற்காக இலங்கை இந்தியாவுடன் இணைந்திருக்க வேண்டும் என்ற கருத்தினை இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு முதல் பட்டாபி சீதாராமையா வரை கொண்டிருந்தனர். 1974,1976களில் கச்சதீவு தொடர்பாக எட்டப்பட்ட இலங்கை–இந்தியா உடன்படிக்கை இந்தியச் செல்வாக்கை வலுப்படுத்தியது. 1977களுக்கு பின்பு ஈழத்தமிழரின் ஆயுதப்போராட்ட வளர்ச்சியிலும், தீர்வு முயற்சிகளிலும் இந்தியா நேரடியான செல்வாக்குச் செலுத்தியது. திம்பு பேச்சுவார்த்தை, இணைப்பு “சீ”, இலங்கையின் வடக்கு மீது உணவுப் பொட்டலங்களை விமானம் மூலம் வீசியமை, இலங்கை இந்தியா உடன்படிக்கை என பல அம்சங்களில் நேரடியாக தலையிட்டது. போரின் போதும் போர் முடிவடைந்த நிலையிலும் வடக்கு கிழக்கு பிரதேசத்தின் மீள்கட்டுமான அபிவிருத்தியிலும் அரசியலிலும் இந்தியாவுக்கு அதிக பங்கு உண்டு. குறிப்பாக மீள் குடியேற்றத்திற்கான வீடுகள் அமைக்கும் திட்டம், பெருந்தெருக்கள், ரயில் சேவைக்கான பாதை அமைப்பது, காங்கேசன்துறை துறைமுக விருத்தி, பலாலி விமான நிலையம், பெற்றோலிய அகழ்வுக்கான கருத்திட்டம் என பல்வேறு விடயங்களில் இந்தியாவின்

பங்கு முக்கியமானதாக காணப்படுகின்றது. எனவே இலங்கை அரசியல் பொருளாதார, கலாசார, இராணுவ விவகாரங்களில் மிக நீண்ட காலமாக இந்தியா கவனமும் கரிசனையும் எடுத்து வருகின்றது. இலங்கை ஒரு தனியரசாகிய போதும் இந்தியாவின் பாதுகாப்பு வலயத்தில் மிக முக்கிய பிரதேசத்தில் காணப்படுவதனால் இலங்கையின் முக்கியத்துவம் அதீதமானதாகக் காணப்படுகின்றது.

## கோட்பாட்டுப் புரிதல்

### *புவிசார் அரசியல் கோட்பாடு*

சர்வதேச அரசியலில் காத்திரமான கோட்பாடுகளில் ஒன்றாகப் புவிசார் அரசியல் கோட்பாடு விளங்குகின்றது. புவி அல்லது புவியியல் இயற்கையாகவே ஓர் அரசியல் இருப்பை தன்னகத்தே கொண்டுள்ளது. காலநிலை, நிலப்பரப்பு, கடல்சார் வளங்கள் மற்றும் புவிப்பரப்பிலுள்ள அனைத்து வளங்களும் அரசியலை தீர்மானிக்கும் வலுவைக் கொண்டவை. நாடுகளுக்கிடையிலான உறவிலும் சர்வதேச உறவுகளிலும் அதிகாரம் எழுச்சிக்கு புவிசார் மூலக்கூறுகள் ஒவ்வொன்றும் தாக்கத்தைச் செலுத்துகிறது. அவ்வாறான கருப்பொருளைக் கொண்டு புவிசார் அரசியல் அரசுகளுக்கிடையிலான உறவுகளை ஆராய்கிறது. இச்சொற்றொடரின் உருவாக்கத்தை முதல் முதலில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த அரசியல் விஞ்ஞானியான ருடால்ஃ கெல்லன் (Rudolf Kjellen) (1864–1922) அறிமுகப்படுத்தினார். geopolitik எனும் சொல்லையே அவர் முதலில் பிரயோகித்தார். புவியியல் அம்சங்களிலிருந்து ஓர் அரசுக்கு எழும் பிரச்சினைகளையும் அரசுகளின் அதிகாரத்தில் பாதிப்பினை ஏற்படுத்தும் பொருளாதாரக் காரணிகளையும் இனக்கூறுகளில் காணப்படும் பிரச்சினைகளையுமே முதன்மைப்படுத்தி ஆராய்ந்தார். அவரது சிந்தனை பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டில் அளப்பரிய கோட்பாடாக மாறியது. முதலாம் (1914–1919) இரண்டாம் உலக (1939–1945) போர்கள் நிலவிய காலப்பகுதியில் புவிசார் அரசியல் கோட்பாடு வலுவான அதிகார அரசியல் கட்டமைப்புக்கான வாதங்களை உருவாக்கியது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் நடுப்பகுதி வரையும் இங்கிலாந்தை சேர்ந்த புவியியலாளரான ஹல்போர்ட் மக்கிண்டர் (Halfort Mackinder) முன்வைத்த புவிசார் அரசியல் பற்றிய கோட்பாட்டின் தன்மை உலகளாவிய ரீதியில் நாடுகளுக்கிடையில் அதிகாரப்போட்டியை ஏற்படுத்துமென வரையறுத்தார். இதனையே இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பாக்கு நீரிணையை மையப்படுத்தி அவதானிக்கமுடிகிறது.

## ஆய்வு வினாக்கள்

1) இலங்கை – இந்திய உறவினைக் கட்டமைத்துக்கொள்வதில் அடிப்படையாகவுள்ள பாக்கு நீரிணையின் வகிபாகம் யாது?
2) இலங்கை – இந்திய உறவானது இலங்கை அரசின் இருப்பிலும் ஈழத்தமிழர்களின் அரசியலிலும் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது?

## ஆய்வு நோக்கங்கள்

பிரதான நோக்கம் – இலங்கை இந்திய உறவில் பாக்கு நீரிணையின் முக்கியத்துவம் மற்றும் அதன் அரசியல் பற்றி அறிதல்.

துணை நோக்கம் – இலங்கை – இந்திய உறவினையும் ஈழத்தமிழர்களின் அரசியலையும் பாக்கு நீரிணையை மையப்படுத்தி ஆராய்தல்.

**ஆய்வின் கருதுகோள்**

இந்திய – இலங்கை – ஈழத்தமிழர் உறவில் கடல் எல்லையை பங்கீடு செய்வதன் அடிப்படையில், பாக்கு நீரிணை ஆதிக்கம் பெறும் மூலோபாயமாகக் காணப்படுகின்றது.

**முறையியல்**

இலங்கை இந்திய உறவில் பாக்கு நீரிணையின் முக்கியத்துவமானது அரசியல் வரலாறு சார்ந்தும் விமர்சனம் சார்ந்தும் ஆராயப்படுகிறது. வரலாற்று ஆய்வு முறையியல், விவரண ஆய்வு முறையியல், விமர்சன யதார்த்தவாத முறையியல் என்பனவற்றை ஆய்வு முறையியல்களாகக் கொண்டுள்ளது. அவ்வகையில் இவ்வாய்வானது பெருமளவிற்கு அரசியல், வரலாறு சார்ந்து உள்ளது. இலங்கையின் அரசியல் வரலாறு ஆரம்பமான காலம் தொடக்கம் இன்று வரையான காலகட்டங்களில் இலங்கை–இந்திய உறவு பாக்கு நீரிணையில் மையம் கொண்டு இயங்குகிற போது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் ஈழத்தமிழருக்கும் ஏற்படுகின்ற விளைவுகளை தேட முயற்சி செய்கிறது. காரணம் பாக்கு நீரிணை ஈழத்தமிழரின் ஆயுதப் போராட்டத்திற்கும் அதனை முடிவிற்கு கொண்டு வரவும் காரணமாய் அமைந்தது என்ற எடுகோளின் அடிப்படையில் ஆய்வு முன்னிலைப்படுத்தப்பட்டு முடிவுகளை விமர்சன யதார்த்தவாத கோட்பாடு சார்ந்து கட்டமைக்கிறது. அதாவது ஒரு நாட்டின் புவிசார் இருப்பு அந்நாட்டின் வெளியுறவுக்கொள்கையை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக, இலங்கையின் புவிசார் இருப்பு அதன் வெளியுறவுக்கொள்கையை காலத்திற்கேற்றவாறு வடிவமைத்துக்கொள்கிறது. மாலைதீவின் புவிசார் அரசியல் செல்வாக்கு அதன் வெளியுறவுக்கொள்கையை தீர்மானிக்கிறது. இவற்றை தவிர கியூபா, தைவான், ரஷ்யா (இருதய நிலக்கோட்பாடு), மடகஸ்கார் போன்ற நாடுகளின் புவிசார் அரசியல் அந்நாடுகளின் வெளியுறவுக்கொள்கையை தீர்மானிப்பதிலும் அந்நாடுகளின் இருப்பிலும் செல்வாக்கு செலுத்துகிறது. இலங்கை அரசின் இருப்பிற்கும், ஈழத்தமிழர்களுக்கும் இந்தியாவிற்கும் பாக்கு நீரிணை அவசியம் பற்றிய புரிதலுக்காக விபரணப்படுத்த வேண்டியதன் பிரகாரம் இத்தளத்தில் விபரண ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவற்றை தவிர மேலதிக தேடல்களின் அவசியம் கருதி பாக்கு நீரிணை மற்றும் இலங்கை–இந்திய அமைவிட முக்கியதுவம், சார்ந்த அரசியல் அறிக்கைகள், ஆவணங்கள், நூல்கள், பத்திரிகைகள், கட்டுரைகள், இணைய செய்திகள் என்பனவும் இவ்வாய்வில் இரண்டாம் நிலை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கலந்துரையாடல்**

இந்தியாவின் தேசிய நலனைக் கட்டி வளர்ப்பதற்கு தேசிய பாதுகாப்பு முக்கியமானது. இந்தியாவை பொறுத்தவரை அதன் தேசிய நலன் மற்றும் தேசிய பாதுகாப்பை நிரற்படுத்த வேண்டுமாயின் இலங்கையுடனான உறவு தனித்துவமானது. இன்னொரு வகையில் இந்தியாவில் இடம்பெறும் அரசியல் எழுச்சிகளின் தாக்கம் இலங்கைத்தீவில் பாரிய விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடியது என்ற அடிப்படையில், இலங்கை அரசு என்றும் இந்தியாவை இராஜதந்திர ரீதியல் கையாளும் இயல்பைக் கொண்டுள்ளது. ஆகவே இந்தியா தனது தேசிய பாதுகாப்பு சார்ந்து உறுதியைப் பேண இலங்கைத்தீவின் புவிசார் அரசியல் முக்கியத்துவத்தை முதன்மைப்படுத்துகிறது.

***இலங்கை-இந்திய அரசியலில் பாக்கு நீரிணை***

- கடல் எல்லை வரையறை – 1974 மற்றும் 1976–ஆம் ஆண்டுகளில் இந்தியா–இலங்கை இடையே கடல் சார்ந்து எழுந்த எல்லை நெருக்கடி இரு அரசுக்குமான உடன்படிக்கைக்கு வழிவகுத்தது.

1974,76ம் ஆண்டுகளில் கச்சதீவைப் பொறுத்து மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை பாக்கு நீரிணையை எல்லையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது.

- இரு நாட்டு மீனவர்களுக்குமான முரண்பாடு – கடல் வளங்களை ஆதிக்கம் செய்யும் நோக்குடன் இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் பரப்புக்குள் வருவதால் இலங்கை மீனவர்கள் அவர்களது நடவடிக்கைக்கு எதிராக நிகழ்த்தி வருகின்ற போராட்டங்கள் இந்திய இலங்கை உறவைப் பாதிக்கும் வகையிலான அணுகுமுறையாக உள்ளது. 2009க்கு பின்னர் இத்தகைய மோதல் தமிழக மக்களுக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் இடையில் விரிசலை ஏற்படுத்தி வருகிறது. அடிப்படையில் கச்சதீவு உடன்படிக்கையை மையப்படுத்தி இரு நாடுகளும் கடல் எல்லையை வகுத்துக் கொண்டார்கள். மீனவர்களும் கடற்படையினரும் மோதிக் கொள்ளும் நிலையமாக பாக்கு நீரிணை மாறி வருகிறது. இதனால் இந்திய ஈழத்தமிழர் உறவும் இலங்கை இந்திய உறவும் நெருக்கடிக்கு உள்ளாகுகிறது.
- சேது சமுத்திரம் திட்டம் – சுதந்திர இந்தியாவின் சேது கால்வாய்திட்டமானது சேது சமுத்திர திட்டமாக அமைக்கப்பட்டு, கைவிடபட்டது. பாக்கு நீரிணையை மையப்படுத்தி அமைக்கப்பட இருந்த சேது சமுத்திரத் திட்டத்திற்கான முயற்சிகள் 1861ம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு அதன் நீரோட்டத்தினாலும், இயற்கை வளங்கள் சார்ந்தும், மீன் வளங்கள் சார்ந்தும் இரு கடல் பிரதேசத்தை அண்டி வாழும் மீனவர் சமுகத்தின் வாழ்வாதாரம் சார்ந்தும் கைவிடப்பட்டது. இவ்வாறு சேதுகால்வாய் அமைக்கவும் அதனை கைவிடவுமான இடைவெளியிற்கு பாக்கு நீரிணையின் நீரோட்ட சுழற்சியே அடிப்படை என விஞ்ஞான பூர்வமாக ஆதரங்கள் உணர்த்துகின்றன.
- இனப்பிரச்சினை – இலங்கையின் இனப்பிரச்சினை பிராந்திய பரிமாணத்தை பெற பாக்கு நீரிணை அடிப்படையாக அமைந்தது என்று இராணுவ வல்லுனர்கள் கருதுகின்றனர். இந்தியாவின் ஆயுதப்போராட்டத்திற்கான ஊக்குவிப்பும் ஆயுத கடத்தல்களும் வடக்கில் ஆயுதப்போராட்டம் வளர்ச்சி பெறவும் ஆயுதப்போராட்டத்தின் தலைமைகள் பாதுகாக்கப்படவும் பாக்கு நீரிணை மையமாகக் காணப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் திறந்த பொருளாதார கொள்கையையும் அமெரிக்கா சார் வெளியுறவு கொள்கையையும் முடிவிற்கு கொண்டு வருவதற்கு ஆயுத போராட்டத்தை பாக்கு நீரிணை ஊடாக முன்னெடுக்க இந்தியா பங்களிப்பு செய்தது. அவ்வாறே 1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் படி இந்திய படைகளை வடக்கு கிழக்கில் நிலை கொள்ள செய்யவும் இந்திய துறைமுகங்களுக்கும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கும் இடையிலான தொடர்புக்கு பாக்கு நீரிணையே அடிப்படையாகும். எனவே இனப்பிரச்சினை பிராந்திய பரிமாணம் பெறவும் ஆயுதப்போராட்டம் வளர்ச்சி அடையவும் ஆயுதப்போராட்ட அமைப்பும் இவற்றின் தலைமைகளும் பயிற்சி பெறவும் பாக்கு நீரிணை ஓர் வலுவான மையப்பகுதியாக அமைந்துள்ளது.

இலங்கை ஒரு தீவாக இருப்பதே அதன் பலமாகும். அதுவே இறைமையாகும். இது இந்தியாவிற்கு நெருக்கடியாகவுள்ளது. அரசியல் அர்த்தத்தில் தீவுக்கு என்று ஒரு தனி அடிப்படை பலம் உண்டு. அத்தகைய பலத்தை இலங்கை ஒரு தீவாக இருப்பதனால் கொண்டிருக்கின்றது. இதன் அடிப்படையில் இலங்கைத்தீவை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள் பாக்கு நீரிணை சார்ந்து கொள்கைகளையும் முடிவுகளையும் முன்வைக்கின்றனர். இதன் ஓர் அங்கமாகவே இலங்கை தீவின் வரலாற்றில் பௌத்த மதத்தின் எழுச்சி தோன்றியது. அசோகனின் வருகையும் தம்மதீப கோட்பாட்டின் பரிமாணமும், பிக்குணி சங்கமித்தாவின் வெள்ளரசு மரக்கிளையுடனான வருகையும் இலங்கை அரசையும்

இலங்கை மக்களையும் பௌத்த தர்மத்தினால் அடையாளப்படுத்தியது. இலங்கை அரசியல் அத்தகைய பௌத்த தர்மத்தின் வியூகத்தினால் வடிவமைக்கப்பட்டது. இதன் விளைவு இலங்கை பௌத்த மதத்தின் பொருட்டு புத்த பிரானினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு எனவும், இதனை தம்மதீப கோட்பாடு உத்தரவாதம் செய்யவும் பாக்கு நீரிணை காரணமாகியது. இது இலங்கைத்தீவை பௌத்த தீவாக அடையாளப்படுத்தி ஏனைய சிறுபான்மை தேசியங்களை அந்நியப்படுத்தியது.

இந்திய ஆட்சியாளர்கள் இந்து மதத்தின் ஒரு பிரிவாகவே பௌத்தத்தை வியாக்கியானப்படுத்துகின்றனர். குறிப்பாக 2021ம் ஆண்டு ஒக்டோபர் 20ம் திகதியன்று முன்னாள் ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷ, பௌத்த பிக்குகள் மற்றும் தொண்டர்கள் என 100ற்கு மேற்பட்டவர்களுடன் இந்தியாவின் உத்தர பிரதேசத்தின் குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தின் திறப்புவிழா நிகழ்வில் கலந்து கொண்டார். குஷிநகர் புத்த பகவான் பரிநிர்வாணம் (Mahaparinirvana) அடைந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதால், இந்த நிகழ்ச்சி இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான மத ரீதியான கலாசார இணைப்பு இந்நிகழ்வாக வலுப்படுத்தப்பட்டது. இது இரு நாடுகளுக்கும் இடையில் கலாசார உறவை மேம்படுத்துவதுடன் இரு நாட்டுக்குமான நட்புறவை அடையாளப்படுத்துகிறது. அதுமட்டுமன்றி நாமல் ராஜபக்ஷ இந்துக்களின் புனித நூலான பகவத்கீதையை சிங்களத்தில் மொழி பெயர்த்து பிரதமர் மோடிக்கு அன்பளிப்பு செயய்துள்ளார். பகவத்கீதை என்பது இந்தியாவின் புனித நூலாக மட்டுமல்லாமல், இந்திய கலாசாரத்தின் அடையாளமாகவும் காணப்படுகிறது. இது இருநாட்டு கலாசாரப் பாரம்பரிய இடைத்தொடர்புகளின் ஓர் அங்கமாகவும் நோக்கப்படுகிறது.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக இருந்த மிலிந்த மொறகொட (Milinda Morahoda) 2021 ஆண்டு மார்ச் மாதம் இலங்கையின் நுவரெலியாவில் அமைந்துள்ள சீதா எலிய என்ற கோயிலிருந்து புனித கல் ஒன்றை எடுத்துச் சென்று அயோத்தி இராமர் கோவில் கட்டுமானத்துக்காக வழங்கியிருந்தார். மிலிந்த மொறகொட இந்திய தூதுவராகப் பொறுப்பேற்கும் காலப்பகுதியில், இலங்கை இந்திய உறவு நெருக்கடி மிக்கதாகக் காணப்பட்டது. அவரது இச்செயல் இலங்கை இந்திய உறவில் ‘மென் அதிகாரத் தந்திரோபாயமாகப்’ (soft power diplomacy) பார்க்கப்பட்டது. அயோத்தி கோவிலில் பயன்படுத்தப்படும் இந்தப் புனிதகல் இராமர், சீதாவின் நினைவில் இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்டது என்பதும் உணர்வு ரீதியாக இரு தேசங்களின் மக்களுக்கு இடையிலான (People to People ) நட்புறவையும் இரு நாட்டுக்குமிடையிலான வெளியுறவிலும் தாக்கத்தைச் செலுத்தக்கூடியது.

***ஈழத்தமிழருடனான உறவு***

2009க்கு பின்னான இலங்கைக்கும் புதுடில்லிக்குமான உறவு என்றும் சுமுகமானதாக காணப்படுகிறது. ஆனால் ஈழத்தமிழர்களுக்கும் புதுடில்லிக்குமான உறவு பெரிதும் கையாளப்படாத உறவாக அமைந்துள்ளது. குறிப்பாக இந்தியா மற்றும் இலங்கை உறவை வடிவமைக்கும் இடைத்தங்கல் காரணியாக ஈழத்தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் காணப்படுகின்றனர். இது வரலாற்று ரீதியான பதிவாக அமைந்துள்ளது. ஆனால் இலங்கைக்கும் இந்தியாவிற்குமான உறவு அதிகம் வெளிப்படை தன்மை இல்லாமலும் தகைமை கொண்டதுமாகக் காணப்படுகிறது. அதற்கு அடிப்படையில் ஈழத்தமிழர்களுக்கும் தமிழகத்துக்குமான உறவே இந்தியாவிற்கும் ஈழத்தமிழர்களுக்குமான உறவாக இலங்கை வியாக்கியானம் புரிந்து கொள்ள விளைகிறது.

ஈழத்தமிழர் இந்தியாவின் நலன்களுக்காகவே வன்முறைக்கும் இனப்படுகொலைக்கும் ஆக்கிரமிப்பிற்கும் இலங்கை அரசினால் உட்படுத்தப்படுகின்றனர். இத்தகைய நிலை 1991ம் ஆண்டு ரஜீவ் காந்தியின் படுகொலை வரை வளர்ச்சி அடைந்ததோடு அதன் ஆரம்பம் 1987 இலங்கை இந்திய உடன்படிக்கையாக அமைந்தது. அதனாலேயே ஆயதப்போராட்ட அமைப்புக்களும் அதன் தலைமைகளும் இந்தியாவுடனான உறவை பகையுறவாக மாற்றிக்கொண்டனர்.

இந்தியாவின் தமிழகத் தமிழர்களுக்கு ஈழத்தமிழர்களுடனான நீண்ட பாரம்பரிய உறவொன்று நிலவுகிறது. இதுவே பாக்குநீரிணை ஊடான ஈழத்தமிழர் தமிழக உறவை கட்டமைக்கிறது. தமிழகத்திற்கும் ஈழத்தமிழருக்குமான உறவு மொழி, மத மற்றும் கலாசார அடையாளங்களினால் ஒன்றிணைந்துள்ளதுடன் ஈழத்தமிழருக்கும் தென்னிலங்கைக்கும் முரண்பாடு எழ அடிப்படையானது.

ஈழத்தமிழரை இந்தியாவுடன் இணைத்துப் பார்ப்பதன் விளைவாகவும் இந்திய ஆதிக்க பரவலுக்கு ஈழத்தமிழர் துணையாய் அமைவர் என்ற அச்சத்தின் காரணமாகவும் இந்தியாவுக்கு எதிரான தமது எதிர்ப்பை இலங்கை அரசு ஈழத்தமிழர் மீது புரிந்து வருகிறது. இதன்படி இந்திய செல்வாக்கிற்கு எதிரான இலங்கை அரசின் இறைமையை பாதுகாப்பதற்கான புள்ளியாக பாக்கு நீரிணை அமைந்துள்ளது. இதுவே இரு நாட்டுக்குமான இறைமையின் தேசிய ஒருமைக்கோட்பாட்டின் அடிப்படையாகும்.

**முடிவுரை**

ஈழத்தமிழர், இலங்கை, இந்தியா உறவின் மையமும் அடிப்படையும் பாக்கு நீரிணையே ஆகும். குறிப்பாக ஈழத்தமிழர் இந்திய உறவின் அடிப்படை பாக்கு நீரிணை எனக்கருதிக் கொண்டாலும் 2009க்கு பின்னர் உறவு தாழ்நிலையில் உள்ளதாகவே தெரிகிறது. ஈழத்தமிழர்களின் ஆயுதப்போராட்டத்திற்கு அடிப்படையாக அமைந்த இந்தியா பாக்கு நீரிணை ஊடாகவே அதன் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் தீர்மானித்தது. அதில் இந்தியாவிற்கு மட்டுமன்றி தென்னிலங்கைக்கும் உலக நாடுகளுக்கும் பங்கு இருந்தது. தென்னிலங்கை வடக்கை நோக்கி மேற்கொள்ளும் அபிவிருத்தித்திட்டங்கள், பௌத்த விகாரைகள், திட்டமிட்ட குடியேற்றங்கள் என்பன அனைத்தும் பாக்கு நீரிணையை தமது கட்டுபாட்டில் வைத்துக்கொள்ளும் முயற்சியே ஆகும். கச்சதீவை நோக்கி இலங்கை ஜனாதிபதியின் விஜயமும் அதன் ஆளுகையின் வெளிப்பாடும் பாக்கு நீரிணையை மையப்படுத்தியதாகவே காணப்படுகிறது. இதன்படி இலங்கை – இந்திய உறவில் பாக்கு நீரிணையின் வகிபாகமானது புவிசார் அரசியல் அடிப்படையில் தவிர்க்க முடியாததாகவும் தனித்துவமானதாகவும் காணப்படுகிறது.

**உசாத்துணைகள்**


ஆனந்தன், ஏ.எஸ். (1995). *கச்சதீவு...அன்றும் இன்றும்.* ஸ்ரீனா அச்சகம்.யாழ்ப்பாணம்.

கணேசலிங்கம், கே.ரீ. (2002). *மாறிவரும் புதிய உலக ஒழுங்கு- புவிசார் அரசியல் நோக்கு.* கந்தர்மடம். யாழ்ப்பாணம்.

கணேசலிங்கம், கே.ரீ. (2006). *சேதுக்கால்வாய் திட்டம் - அரசியல் பொருளாதார இராணுவ சூழலியல் நோக்கு.* பிரம்மா வெளியீடு.யாழ்ப்பாணம்.

கணேசலிங்கம், கே.ரீ. (2010). *சர்வதேச அரசியல் சில பார்வைகள்.* சேமமடு பதிப்பகம்.யாழ்ப்பாணம்.

கணேசலிங்கம், கே.ரீ. (2013). *சமகால அரசியல் கலாசார செல்நெறிகள்.* சேமமடு பதிப்பகம்.யாழ்ப்பாணம்.

கிருஷ்ணமோகன், த. (2012). *இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் முக்கோண அதிகாரப் போட்டியும் இலங்கையின் இனமோதலும்.* குமரன் புத்தக இல்லம். கொழும்பு-சென்னை.

தங்கசாமி,எஸ். ஏ. (1992 ஜீலை). *பன்னாட்டு உறவும் அரசியல் சூழ்ச்சி திறனும்.* பண்ணை பதிப்பகம்.

திருநாவுக்கரசு, மு. *இலங்கையின் இனப்பிரச்சினையின் அடிப்படை*. தமிழ்க்குலம் பதிப்பாலயம்.

திருநாவுக்கரசு, மு. (2008). *ஒற்றைமைய உலக அரசியலில் போரும் சமாதானமும்.* காலச்சுவடு வெளியீடு

திருநாவுக்கரசு, மு. (2018 மாசி). *பூகோளவாதம் புதிய தேசியவாதம்.* தமிழாய்வு மையம் இலங்கை - பிரித்தானியா.

ருமியான்த்செவ்,யெ. (1986). *இந்துப்பெருங்கடலுக்குச் சமாதானமும் பாதுகாப்பும்.* முன்னேற்றப்பதிப்பகம்.

ஜெய்சங்கர்,எஸ். (2021 ஜீன்). *இந்திய வழி-நிச்சயமற்ற உலகுக்கான வியூகங்கள்.* தமிழ் திசை பதிப்பகம்.

Kodikara, S.U. (Ed.). (1989). *Indo-Lankan Agreement of July 1987*. University of Colombo.